உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

*S.C No.284/2022*

பெயர் : ரவிச்சந்திரன்
தகப்பனார் பெயர் :கிருஷ்ணன்
கணவர் பெயர் :
வயது :*56*
கிராமம் :மேலூர்
வட்டம் :மேலூர்
தொழில் :நகைக்கடை

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

*08.08.2024*

அ.சா.*2* முதல் விசாரணை*:*

ஆஜர் எதிரிகளை யாரென்றே எனக்கு தெரியாது. நகைகடையில் நகை ஆர்டர் எடுத்து செய்து கொடுக்கும் குருசாமி என்பவரை தெரியுமா என்றால் அவரை தெரியும். எதற்காக என்னை சாட்சியாக அழைத்தார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. குருசாமி நகையை பறிகொடுத்தது தொடர்பாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள் என்றால் இல்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது).

அ.த.கு.வி *:*

நான் மேலூர் நகைக்கடை பஜாரில் கடந்த *25* ஆண்டுகளாக நகைக்கடை வைத்துள்ளேன். ஆஜர் *1*வது எதிரி கௌரிசங்கர் என்பவர் மேலூரில் நகைக்கடை வைத்துள்ளார் என்றால் சரிதான். அவரை எனக்கு நன்றாக தெரியும். குருசாமி என்பவரிடம் நான் வரவு செலவு செய்வது கிடையாது. அவர் என்னிடம் ஆர்டர் எடுப்பதில்லை. நான் குருசாமி என்பவரிடம் ஆர்டர் கொடுத்து வா்ங்கிவந்தேன் என்றும், தற்போது ஆஜர் எதிரிகளுடன் சமரசம் செய்து கொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கடந்த *03.09.2008*ம் வருடம் இரவு சுமார் *7*ல் இருந்து *8* மணியளவில் பொதுவாக அந்த நேரம் மின்விநியோகம் தடைப்பட்டிருந்தது என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் மின்தடை ஏற்பட்ட காலத்தில் குருசாமி வைத்திருந்த கைப்பையில் *1* கிலோ *300* கிராம் எடை கொண்ட தங்கநகைகளை பறித்து கொண்டு சென்றார்கள் என்றால் அவ்வாறு சொன்னார்கள், அதை பற்றி தெரியாது. குருசாமி சத்தமிடவே அருகில் கடையில் இருந்த நான் மற்றும் அருகில் இருந்தவர்கள் அனைவரும் ஆஜர் எதிரிகளை தேடினோம் என்றும், பின்னிட்டு போலிஸ் விசாரணையில் நடந்தவையை கூறிவிட்டு தற்போது பிறழ் சாட்சியாக மாறி ஆஜர்

எதிரிகளுடன் சேர்ந்து சமரசம் செய்து கொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**ஓம்.M.சாமுண்டீஸ்வரி பிரபா**
**உதவி அமர்வு நீதிபதி,**
**மேலூர்**